தினமணி

**பொங்கல் பண்டிகை கொண்டாட்டம்: தவிக்கும் விவசாயிகள்!**

ஜி.சுந்தரராஜன்

First Published : 13 Jan 2012 03:25:18 AM IST



புயலில் சேதமுற்ற பயிர்களை பார்த்துக் கவலைப்படும் விவசாயி. (உள்படம்) புயலில் சரிந்த வாழை மரங்கள்.

சிதம்பரம், ஜன.12: புயலால் பயிர்கள் முற்றிலும் சேதமடைந்துள்ளதால் பெருத்த நஷ்டமடைந்துள்ள விவசாயிகள், பொங்கல் பண்டிகையை எப்படிக் கொண்டாடுவது என வேதனையுடன் உள்ளனர்.

இந்த ஆண்டு ஜூன் முதல் வாரத்திலேயே மேட்டூரிலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதனால் கடலூர் மாவட்டத்தில் குறிப்பாகக் காவிரி டெல்டா கடைமடை பகுதியான சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் வட்டங்களில் நீருக்கு பஞ்சமின்றி விவசாயிகள் முன்னதாக விதை விட்டனர்.

விவசாயத் தொழிலாளர் பற்றாக்குறை, உரத்தட்டுப்பாடு, மின்சார பற்றாக்குறை, வேளாண் இடுபொருள்களின் விலையேற்றம் உள்ளிட்ட பல்வேறு இன்னல்களுக்கு இடையே நகைகளை அடமானம் வைத்தும், கடன் வாங்கியும் சம்பா நெல் பயிரிட்டனர்.

இந்நிலையில் பொங்கலுக்கு அறுவடைக்குத் தயாராக இருந்த நெற்பயிர்கள் டிசம்பர் 30-ம் தேதி ஏற்பட்ட புயலில் முற்றிலும் சேதமுற்று பதரானது. நெற்பயிர் மட்டுமின்றி கரும்பு, வாழை,

மணிலா, வெற்றிலை, மா, பலா, முந்திரி உள்ளிட்ட வேளாண் விளைபயிர்கள் அனைத்தும் சேதமுற்றன.

இதனால் பெருத்த நஷ்டமடைந்துள்ள விவசாயிகள் வாங்கிய கடனைக் கூட திருப்பிக் கொடுக்க முடியாத சூழலில் உள்ளனர். பொங்கல் பண்டிகைக்குத் தேவையான பன்னீர் கரும்பு, மஞ்சள், வாழை, தென்னை, பூக்கள் ஆகியவை முற்றிலும் சேதமுற்றுள்ளது. இந்நிலையில் பொங்கல் பண்டிகையை எவ்வாறு கொண்டாடுவது என விவசாயிகள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர்.

இது குறித்துத் தமிழக உழவர் முன்னணி ஆலோசகர் மா.கோ. தேவராசன் தெரிவித்தது: பொங்கல் பண்டிகைக்கு முன்பாக பயிர்களுக்கு நிவாரணம் வழங்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளது விவசாயிகளுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் உள்ளது. ஆனால் பயிர் சேத கணக்கீடு சரியாக எடுக்கப்படவில்லை.

சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் வட்டங்களில் சுமார் 1.60 லட்சம் ஏக்கரில் பயிரிட்டுள்ள நெற்பயிர் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஒரு ஏக்கர் பயிரிட விவசாயிகளுக்கு ரூ.15 ஆயிரம் முதல் ரூ.25 ஆயிரம் வரை செலவாகிறது.

எனவே தமிழக அரசு அறிவித்துள்ள ஏக்கருக்கு ரூ.4 ஆயிரம் நிவாரணத் தொகை போதுமானது இல்லை. மேலும், கடந்த ஆண்டு வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு இதுவரை பயிர் காப்பீடு தொகை வழங்கப்படாமல் உள்ளது விவசாயிகளுக்கு மேலும் வேதனையளிக்கிறது.

குறிப்பாகக் கடந்த ஆண்டு வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட குமராட்சி பிர்காவில் உள்ள 50-க்கும் மேற்பட்ட கிராமங்கள் சிதம்பரம் பிர்காவில் உள்ளதால் பயிர் காப்பீடு பெறமுடியாமல் அப்பகுதி விவசாயிகள் வேதனையில் உள்ளனர்.

எனவே மேற்கண்ட கிராமங்களை குமராட்சி பிர்காவில் சேர்த்து விடுபட்ட விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இந்த ஆண்டு பயிர் காப்பீடு தொகை ஏக்கருக்கு ரூ.120-ல் இருந்து ரூ.600-ஆக உயர்த்தப்பட்டதால் விவசாயிகள் யாரும் இந்த ஆண்டு பயிர் காப்பீடு செய்யவில்லை. எனவே விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் கருதி தமிழக முதல்வர் நிவாரணத் தொகையை உயர்த்த வேண்டும்.

புதுச்சேரி அரசு போன்று விவசாயிகளின் பயிர் காப்பீடு தொகையை அரசே செலுத்த வேண்டும். விவசாயிகள் பெற்ற கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என விவசாயிகள் மிகுந்த எதிர்பார்ப்பில் உள்ளனர் என்றார் தேவராசன்.

**புயல் எதிரொலி உச்சத்தில் கரும்பு விலை**

First Published : 13 Jan 2012 03:27:04 AM IST



பொங்கல் பண்டிகையையொட்டி விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள கரும்புக் கட்டுகள். இடம்: திருவள்ளூர் பஜார் வீதி.

திருவள்ளூர், ஜன.12: புயலில் பல நூறு ஏக்கர் கரும்பு பயிர்கள் சேதமடைந்துள்ளதால் கடந்த ஆண்டை விட இரு மடங்கு கூடுதல் விலைக்கு கரும்பு விற்கப்படுகிறது.

தமிழர் பண்டிகைகளில் முக்கியமானது பொங்கல். கரும்பு இல்லாமல் பொங்கல் பண்டிகை இல்லை. ஓரிரு நாளில் பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட உள்ள நிலையில், கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு கரும்பு விலை அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டு 20 கரும்பு கொண்ட ஒரு கட்டின் விலை ரூ.150 முதல் 180 வரை விற்கப்பட்டது. இவற்றை சிறு வியாபாரிகள் வாங்கிச் சென்று கரும்பு ஒன்று ரூ.15 முதல் 20 ரூபாய் வரை விற்றனர்.

நடப்பாண்டு ஒரு கட்டு கரும்பு ரூ.250 முதல் 300 வரை விற்கப்படுகிறது. திருவள்ளூர் பஜாரில் ஒரு கரும்பு 25 ரூபாய் முதல் 30 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

இதுகுறித்து வியாபாரிகளிடம் கேட்டபோது, கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு டீசல் விலை அதிகரித்திருப்பதால் லாரி வாடகை கடுமையாக உயர்ந்துள்ளது. இந்நிலையில் அண்மையில் வீசிய புயலால் பல மாவட்டங்களில் கரும்பு பயிர்கள் சேதமடைந்துள்ளன. இதனால் கரும்பு கிடைப்பதே அரிதாகியுள்ளது. இந்த கரும்புகளை பண்ருட்டி, ஈரோடு ஆகிய பகுதிகளில் இருந்து வாங்கி வந்தோம். ஒரு கட்டு 300 ரூபாய் வரை விற்கின்றோம். விலை அதிகரித்துள்ளதால் இந்த ஆண்டு வியாபாரம் மந்தமாகவே உள்ளது என்றார்.

மண் பானை: அதேபோல் மண் பானை விலையும் அதிகரித்துள்ளது. பொங்கல் வைக்க பயன்படுத்தும் சிறிய பாணைகள் கடந்த ஆண்டு 10 ரூபாய் முதல் 15 ரூபாய் வரை விற்பனையானது. இந்த ஆண்டு 20 ரூபாய் முதல் 25 ரூபாயாக உயர்ந்துள்ளது.

**புயல் பாதித்த பயிர்களுக்கு நிவாரணம் வழங்கும் பணி தொடக்கம்**

First Published : 13 Jan 2012 09:04:11 AM IST

கடலூர்,ஜன.12: கடலூர் மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்ட வேளாண் பயிர்களுக்கு நிவாரணத் தொகை வழங்கும் பணி வியாழக்கிழமை தொடங்கியது.

மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் 1,34,631 பேருக்கு வேளாண் துறை சார்பிலும், 52,740 விவசாயிகளுக்கு தோட்டக்கலைத்துறை சார்பிலும் மொத்தம் ரூ. 120.16 கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட உள்ளது.

வேளாண் பயிர்களுக்கு நிவாரணத் தொகை வழங்கும் பணி கடலூர் மஞ்சக்குப்பத்தில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் வியாழக்கிழமை மாலை தொடங்கியது.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகைகளை அமைச்சர்கள் எம்.சி. சம்பத் (ஊரகத் தொழில்கள் துறை), செல்லூர் கே.ராஜு (கூட்டுறவுத்துறை) நத்தம் கே.விஸ்வநாதன் (மின்சாரத் துறை) ஆகியோர் வழங்கினர்.

ஆலோசனைக் கூட்டம்: முன்னதாக புயலால் பாதிக்கப்பட்ட வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்த ஆலோசனைக் கூட்டம், புயல் நிவாரண மேற்பார்வை அலுவலர் பெ.சீதாராமன் தலைமையில் கடலூரில் நடந்தது.

இதில் வேளாண் துறை, தோட்டக்லைத் துறை, வருவாய்த்துறை மற்றும் கூட்டுறவுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விரைந்து நிவாரணத் தொகைகளை வழங்க சீதாராமன் உத்தரவிட்டார்.

**கரும்பு, மஞ்சள் கொத்து அனுப்பும் பணி தீவிரம்**

First Published : 12 Jan 2012 12:41:14 PM IST

சிவகங்கை, ஜன. 11: சிவகங்கை அருகே கரும்பு, மஞ்சள்கொத்து ஆகியவற்றை விற்பனைக்காக பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பும் பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

சிவகங்கை அருகே உள்ள மேலச்சாலூர், கீழச்சாலூர், பெருமாள்பட்டி, பாப்பாபட்டி, கொழிஞ்சிபட்டி, அழகர்பட்டி, கிருகம்பட்டி, திருமாள்பட்டி, சருவளையபட்டி, இடையமேலூர் உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான பரப்பளவில் கரும்பு, மஞ்சள் உள்ளிட்டவை பயிரிடப்பட்டுள்ளன.

அவை தற்போது அறுவடைக்குத் தயாராக உள்ளன. பொங்கல் பண்டிகைக்கு இன்னும் 4 நாள்களே உள்ள நிலையில் விற்பனைக்காக கரும்பு, மஞ்சள் செடிகளை அனுப்பும் பணி மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

சுற்று வட்டார மாவட்டங்கள் மட்டுமின்றி, பல மாநிலங்களிருந்தும் வியாபாரிகள் நேரடியாக இங்கு வந்து கொள்முதல் செய்கின்றனர்.

திருவாடனை பகுதியிலிருந்து வந்திருந்த வியாபாரி செல்லபாண்டி கூறுகையில், தலா 10 கரும்புகள் கொண்ட 30 கட்டுகள் ஒரு மாட்டு வண்டியில் பிடிக்கும்.

ஒரு மாட்டு வண்டி கரும்பை ரூ. 2500 முதல் ரூ. 4000 வரை தரத்துக்கு ஏற்றவாறு விவசாயிகளிடமிருந்து வாங்குகிறோம்.

லாரியின் அளவுக்கு ஏற்ப 16 வண்டி முதல் 25 மாட்டு வண்டி வரையிலான கரும்புகள் எடுத்துச் செல்ல முடியும் என்றார்.

விவசாயி சுப்பிரமணியம் கூறுகையில், 50 மஞ்சள் கொத்து அடங்கிய கட்டு ரூ. 250-க்கு விற்கப்படுகிறது.

மஞ்சள், கரும்பு ஆகியவற்றை வெட்டி லாரிகளில் ஏற்றி அனுப்பும் பணி புதன்கிழமை முதல் நடைபெறுகிறது.

சனிக்கிழமை வரை இப்பணி நடைபெறும் என்றார் அவர்.

**நெல் மகசூலை பாதிக்கும் எலிகளை ஒழிக்க வலியுறுத்தல்**

First Published : 12 Jan 2012 01:00:00 PM IST

திருச்செங்கோடு, ஜன 11: எலிகளால் கணிசமான அளவு நெல் மகசூல் பாதிக்கப்படுவதால் அவைகளை ஒழிக்குமாறு வேளாண்துறை அறிவுறுத்தி உள்ளது.

இது குறித்து பள்ளிப்பாளையம் வேளாண் உதவி இயக்குனர் பா. முரளீதரன் கூறியது:-

பள்ளிப்பாளையம் வட்டாரத்தில் சுமார் 10 ஆயிரம் ஏக்கரில் நெல் நடவு செய்யப்பட்டுள்ளது. தற்போது கதிர்கள் முற்றி அறுவடைக்கு தயராக உள்ளன. பொங்கலுக்கு முன்னதாக அறுவடை முடிந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் வயல் வரப்புகளில் எலிகளின் நடமாட்டம் காணப்படுகிறது. ஒருங்கிணைந்த வழிமுறைகள் மூலம் இவற்றை ஒழிக்க வேண்டும்.

ஒரு ஜோடி எலிகள் ஆண்டுக்கு 40 குட்டி வரை போடும். அவை 45 நாட்களில் வளர்ந்து பருவத்திற்கு வந்து விடும். ஒரு வயலில் 3 ஆயிரம் கிலோ தானியம் வளர்ந்தால் 250 கிலோ தானியத்தை எலிகள் கொரித்து சேதமாக்கும். ஆகவே எலிவளைகளைக் கண்டு அவற்றைப் பிடித்து அழிக்கவேண்டும். கிட்டி வைத்தும் பிடிக்கலாம். வளைகளில் போரேட் என்ற மருòது கரைசலை ஊற்றி அழிக்கலாம். எலிகளுக்கு பிடித்தமான பொரி, நிலக்கடலை ஆகியவற்றுடன் ஜிங் பாஸ்பைடு கலந்து வைத்து அழிக்கலாம்.

இது பற்றிய ஆலோசனைகள் தேவைப்படின் வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என்றார் அவர்.

**'விவசாயிகளுக்கு ரூ. 32 கோடி கூட்டுறவுக் கடன்'**

First Published : 12 Jan 2012 11:53:20 AM IST

பெரம்பலூர், ஜன. 11: பெரம்பலூர் மாவட்டத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மூலம் விவசாயிகளுக்கு ரூ. 32 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியம், திருப்பெயர் கிராமத்தில் மனுநீதி நாள் நிறைவு நாள் முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

இந்த முகாமுக்கு தலைமை வகித்த ஆட்சியர் மேலும் பேசியது:

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள 53 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மூலம், விவசாயிகளுக்கு ரூ. 32 கோடி கூட்டுறவுக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், ரூ. 8 கோடி கடன் வழங்கப்பட உள்ளது. இதைத் தகுதியுள்ள விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

கறவை மாடு, உழவு மாடு, செம்மறி ஆடுகள் வாங்குவதற்கு கடனாக ரூ. 3 கோடியும், நகைக் கடனாக ரூ. 80 கோடியும் நிகழாண்டில் கூட்டுறவுத் துறை மூலம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம், பெரம்பலூர் மாவட்டத்தில் ஊராட்சி வாரியாக கணக்கெடுப்பு முடிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் கணினியில் பதிவு செய்யப்பட்டு, கணக்கெடுப்புக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்துக்கு 12 வகையான விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. ஐந்தாண்டுகளில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். இதில் முதல் கட்டமாக 20 ஊராட்சிகளில் முழுமையாகக் கணக்கெடுப்புப் பணி முடிக்கப்பட்டுள்ளது. திருப்பெயர் முதல் குரும்பலூர் வரையுள்ள சாலையைச் சீரமைக்க ரூ. 68 லட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது என்றார் அவர். பின்னர், 35 பேருக்கு உழவர் பாதுகாப்புத் திட்ட முதியோர் உதவித் தொகை ரூ. 42 லட்சமும், 9 பேருக்கு மாற்றுத் திறாளிகள் உதவித் தொகை ரூ. 1 லட்சத்து 80 ஆயிரமும், ஒருவருக்கு முதிர்கன்னி உதவித் தொகை ரூ. 12 ஆயிரமும், 44 பேருக்கு இந்திரா காந்தி தேசிய விதவை உதவித் தொகையாக ரூ. 5 லட்சத்து 28 ஆயிரமும், 60 பேருக்கு இந்திரா காந்தி தேசிய முதியோர் உதவித் தொகையாக ரூ. 7 லட்சத்து 20 ஆயிரமும், கணவனால் கைவிடப்பட்டவருக்கு ரூ. 1 லட்சத்து 20 ஆயிரமும், வேளாண்மைத் துறை சார்பில், 12 பேருக்கு ரூ. 38,546, பட்டா மாற்றம் 7 பேருக்கு, வீட்டுமனைப் பட்டா மாற்றம் 6 பேருக்கு, நத்தம் பட்டா மாற்றம் 17 பேருக்கு, குடும்ப அட்டை 5 பேருக்கு என மொத்தம் 197 பேருக்கு ரூ. ஒரு கோடியே 83 லட்சத்து 39 ஆயிரத்து 946 மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை ஆட்சியர் வழங்கினார்.

முகாமில் ஒன்றியக் குழுத் தலைவர் ஆர்.பி. மருதைராஜ், மேலப்புலியூர் ஊராட்சித் தலைவர் ந. செல்வம், வருவாய்க் கோட்டாட்சியர் இரா. ரேவதி, தனித் துணை ஆட்சியர் தெய்வசிகாமணி,

மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் கு. மனோகரன், தாட்கோ பொது மேலாளர் கண்ணன், வட்டாட்சியர் சரவணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**நறுமணப் பொருட்கள் ஏற்றுமதி ரூ.6,209 கோடியாக அதிகரிப்பு**

ஜனவரி 13,2012,00:32



மும்பை:நடப்பு நிதியாண்டின் ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான எட்டு மாத காலத்தில், நாட்டின் நறுமணப் பொருட்கள் ஏற்றுமதி, மதிப்பின் அடிப்படையில், 6,209 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. இது, கடந்த நிதியாண்டின் இதே காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை விட, 43 சதவீதம் (4,335 கோடி ரூபாய்) அதிகம் என, நறுமணப் பொருட்கள் வாரியம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதேசமயம், மதிப்பீட்டு காலத்தில், அளவின் அடிப்படையில், நறுமணப் பொருட்கள் ஏற்றுமதி, 5 சதவீதம் சரிவடைந்து, 3 லட்சத்து 72 ஆயிரத்து 10 டன்னிலிருந்து, 3 லட்சத்து 51 ஆயிரத்து 900 டன்னாக குறைந்துள்ளது.

டாலர் மதிப்பின் அடிப்படையிலான நறுமணப் பொருட்கள் ஏற்றுமதி, 94.80 கோடி டாலரிலிருந்து, 133.20 கோடி டாலராக உயர்ந்துள்ளது.நடப்பு 2011-12ம் நிதியாண்டில், அளவின் அடிப்படையில் 5 லட்சம் டன் நறுமணப் பொருட்கள் ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. முதல் எட்டு மாத காலத்தில், நிர்ணயிக்கப்பட்ட இலக்கில், 70 சதவீதம்

எட்டப்பட்டுள்ளது.கணக்கீட்டு காலத்தில், மிளகு ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 43 சதவீதம் வளர்ச்சி கண்டு, 11 ஆயிரத்து 850 டன்னிலிருந்து, 17 ஆயிரம் டன்னாகவும், மதிப்பின் அடிப்படையில், இதன் ஏற்றுமதி, 217 கோடி ரூபாயிலிருந்து, 518 கோடி ரூபாயாகவும் அதிகரித்துள்ளது.


சிறிய வகை ஏலக்காய் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 444 சதவீதம் உயர்ந்து, 570 டன்னிலிருந்து, 3,100 டன்னாகவும், மதிப்பின் அடிப்படையில், இதன் ஏற்றுமதி, 65 கோடி ரூபாயிலிருந்து, 253 கோடி ரூபாயாகவும் அதிகரித்துள்ளது. பெரிய ஏலக்காய் ஏற்றுமதி, மதிப்பின் அடிப்படையில், 18 கோடி ரூபாயிலிருந்து, 37 கோடி ரூபாயாகவும், அளவின் அடிப்படையில், 380 டன்னிலிருந்து, 475 டன்னாகவும் உயர்ந்துள்ளது.மிளகாய் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 24 சதவீதம் குறைந்து, 1 லட்சத்து 73 ஆயிரத்து 500 டன்னிலிருந்து, 1 லட்சத்து 32 ஆயிரத்து 500 டன்னாக குறைந்துள்ளது. அதேசமயம், மதிப்பின் அடிப்படையில், இதன் ஏற்றுமதி, 25 சதவீதம் வளர்ச்சி கண்டு,1,053 கோடி ரூபாயிலிருந்து, 1,266 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.

இஞ்சி ஏற்றுமதி, மதிப்பின் அடிப்படையில், 163 சதவீதம் அதிகரித்து, 49 கோடியிலிருந்து, 130 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. அளவின் அடிப்படையில், இதன் ஏற்றுமதி, 30 சதவீதம் வளர்ச்சி கண்டு, 8,650 டன்னிலிருந்து, 11 ஆயிரத்து 250 டன்னாக உயர்ந்துள்ளது.தனியா ஏற்றுமதி, மதிப்பின் அடிப்படையில், 8 சதவீதம் சரிவடைந்து, 116 கோடியிலிருந்து, 107 கோடி ரூபாயாக குறைந்துள்ளது. அளவின் அடிப்படையில், இதன் ஏற்றுமதி, 41 சதவீதம் குறைந்து, 30 ஆயிரத்து 645 டன்னிலிருந்து, 18 ஆயிரத்து 200 டன்னாக சரிவடைந்துள்ளது.
மஞ்சள் ஏற்றுமதி, மதிப்பின் அடிப்படையில் 15 சதவீதம் அதிகரித்து, 496 கோடியிலிருந்து, 71 கோடி ரூபாயாகவும், அளவின் அடிப்படையில், இதன் ஏற்றுமதி, 63 சதவீதம் அதிகரித்து, 35 ஆயிரத்து 500 டன்னிலிருந்து, 58 ஆயிரம் டன்னாகவும் உயர்ந்துள்ளது.

பூண்டு ஏற்றுமதி, மதிப்பின் அடிப்படையில், 89 சதவீதம் சரிவடைந்து, 65 கோடியிலிருந்து, 7 கோடி ரூபாயாக குறைந்துள்ளது. இதன் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 94 சதவீதம் குறைந்து, 16 ஆயிரத்து 625 டன்னிலிருந்து, 1,075 டன்னாக சரிவடைந்துள்ளது.கறிமசாலா தூள் ஏற்றுமதி, மதிப்பின் அடிப்படையில், 16 சதவீதம் அதிகரித்து, 130 கோடியிலிருந்து, 164 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இதன் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 16 சதவீதம் வளர்ச்சி கண்டு, 9,875 டன்னிலிருந்து, 11 ஆயிரத்து 500 டன்னாக உயர்ந்துள்ளது.

உணவுப் பொருள் பணவீக்கம் 2.90 சதவீதம் எதிர்மறை வளர்ச்சி

ஜனவரி 13,2012,00:31




புதுடில்லி:நாட்டின் உணவுப் பொருள் பணவீக்கம், டிசம்பர் 31ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில், 2.90 சதவீதம் என்ற அளவில் எதிர்மறை வளர்ச்சியைக் கண்டுள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 3.36 சதவீதம் என்ற அளவில் எதிர்மறை வளர்ச்சியைக் கண்டிருந்தது. ஆக, உணவுப் பொருள் பணவீக்கம் தொடர்ந்து இரண்டு வாரங்களாக எதிர்மறை வளர்ச்சியைக் கண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.கணக்கீட்டு வாரத்தில், வெங்காயத்தின் விலை, 74.77 சதவீதம் குறைந்து காணப்பட்டது.

இது தவிர, உருளைக்கிழங்கு (31.97 சதவீதம்), கோதுமை (3.35 சதவீதம்), காய்கறிகள் (49.03 சதவீதம்) ஆகியவற்றின் விலையும் குறைந்திருந்தது.அதேசமயம், புரதச்சத்து நிறைந்த உணவுப் பொருட்களின் விலை ஆண்டுக் கணக்கின் அடிப்படையில் உயர்ந்திருந்தது. குறிப்பாக, பருப்பு வகைகளின் விலை 14.72 சதவீதம் அதிகரித்திருந்தது. மேலும், பால் (10.79 சதவீதம்), மீன், முட்டை, இறைச்சி (15.22 சதவீதம்), பழங்கள் (9 சதவீதம்), உணவு தானியங்கள் (2.03 சதவீதம்) ஆகியவற்றின் விலை அதிகரித்து காணப்பட்டது.முக்கிய பொருட்களுக்கான பணவீக்கம் 0.51 சதவீதம் என்ற அளவில் உயர்ந்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில் 0.10 சதவீதம் என்ற அளவில் குறைந்து காணப்பட்டது. மொத்த விலை குறியீட்டு எண் கணக்கீடு செய்வதில், முக்கிய பொருட்களின் பங்களிப்பு 20 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது.உணவு சாராத பொருட்கள் பிரிவின் கீழ், நூலிழை மற்றும் எண்ணெய் வித்துக்கள் விலை 1.29 சதவீதம் அதிகரித்துள்ளது.

இது, இதற்கு முந்தைய வாரத்தில், 0.85 சதவீதம் என்ற அளவில் குறைந்து காணப்பட்டது.எரிபொருள் மற்றும் மின்சாரத்திற்கான பணவீக்கம், 14.45 சதவீதமாகக் குறைந்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 14.60 சதவீதமாக உயர்ந்து காணப்பட்டது.இது குறித்து, மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறுகையில், "உணவுப்

பொருள் பணவீக்கம் தொடர்ந்து எதிர்மறை வளர்ச்சியை கண்டு வருகிறது. இது, வரும் வாரங்களிலும் தொடரும் நிலையில், நாட்டின் ஒட்டு மொத்த பணவீக்கமும் கட்டுக்குள் வரும்' என்று தெரிவித்தார்.

**கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.2,500 வழங்கணும் : தமிழ்நாடு கள் இயக்கத்தினர் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 13,2012,01:50 IST

கருத்தை பதிவு செய்ய

நாமக்கல்: "தமிழக அரசு, கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு, 2,100 ரூபாய் மட்டுமே அறிவித்துள்ளது. அதை மாற்றி, தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்தபடி, டன் ஒன்றுக்கு, 2,500 ரூபாய் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, கள் இயக்க ஆலோசனை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு கள் இயக்க ஆலோசனை கூட்டம், நாமக்கல்லில் நடந்தது. கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் நல்லசாமி தலைமை வகித்தார். மாநில அமைப்பாளர்கள் ராமசாமி, கதிரேசன், தமிழக விவசாயிகள் சங்க தலைவர் ராமசாமி, அமைப்பாளர் கோகுல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில், வீழ்ந்து விட்ட கிராம பொருளாதாரத்தை மீட்கவும், பனை, தென்னை மரங்களை காக்கவும், ஒரு விழிப்புணர்வு பிரச்சாரப் பயணம், கன்னியாகுமரியில் இருந்து, சென்னை வரை, ஜனவரி 21ம் தேதி துவங்குவது என்றும், 15 மாவட்டங்கள் வழியாக பயணக்குழுவினர் சென்று, குடியரசு தினத்தன்று, சென்னையில் முடிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

வேளாண் விலை பொருட்களின் விலை, வெகுவாக குறைந்துள்ளது. மரவள்ளி, மஞ்சள் விலையும் சரிந்துவிட்டது. பருப்பு, சமையல் எண்ணெய், காய்கறி, சர்க்கரை போன்ற பொருட்களின் விலை பாதியாக குறைந்துள்ளது. அதன் காரணமாக, சாகுபடியாளர்கள் பெருத்த நஷ்டத்தை எதிர்கொண்டுள்ளனர். இந்நிலையில், ஹோட்டல்களில் உயர்த்தப்பட்ட விலை அப்படியே உள்ளது. ஆகவே, உணவு பண்டங்களில் விலையை குறைக்க, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தென்னை விவசாயிகள், பனை தொழிலாளர் நலவாரியத்தின் தலைவர்களாக இருந்தவர்கள், ஆட்சி மாற்றத்தின் காரணமாக விலகிக்கொண்டனர். புதிய அரசு, இந்த வாரியங்களுக்கு புத்துயிர் அளிக்கும் வகையில், பொறுப்பாளர்களை நியமிக்க வேண்டும். அ.தி.மு.க., அரசு, தேர்தல் வாக்குறுதியில் கரும்பு கொள்முதல் விலை டன் ஒன்றுக்கு, 2,500 ரூபாய் வழங்கப்படும் என அறிவித்திருந்தது. தற்போது, ஆதார விலையாக டன் ஒன்றுக்கு, 2,100 ரூபாய் மட்டுமே அறிவித்துள்ளது. அதை மாற்றி, தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்தபடி டன் ஒன்றுக்கு, 2,500 ரூபாய் வழங்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள்

நிறைவேற்றப்பட்டது.
நிகழ்ச்சியில், கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்க அமைப்பாளர்கள் கோபிநாத், தங்கராசு, கள் இயக்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

**சிறுதானிய உற்பத்தி தீவிர சாகுபடி பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 13,2012,03:09 IST

கருத்தை பதிவு செய்ய

மதுரை : தமிழக அரசு சிறுதானிய உற்பத்தியை அதிகரிக்க முடிவு செய்துள்ளது. இதற்காக விவசாயிகளுக்கு அதிகாரிகள் தீவிர சாகுபடி பயிற்சி அளித்து வருகின்றனர்.
மதுரை மாவட்டத்தில் சிறுதானியம் பயிரிடும் திருமங்கலம், கள்ளிக்குடி, டி.கல்லுப்பட்டி வட்டார விவசாயிகளுக்கு, விவசாய கல்லூரியில் 5 நாள் பயிற்சி அளிக்கப்பட்டது.
கேழ்வரகு, தினை, சாமை, வரகு, பனிவரகு போன்றவற்றின் சாகுபடி குறித்து விளக்கினர்.உரநிர்வாகம், பயிர்பாதுகாப்பு, மதிப்பு கூட்டுதல், சந்தைப்படுத்துதல் குறித்து விளக்கப்பட்டது. திருமங்கலம் உதவி இயக்குனர் மனோகரன்
வரவேற்றார். விவசாய கல்லூரி முதல்வர் வைரவன் துவக்கி வைத்தார். ஒன்றிய தலைவர் தமிழழகன் மானாவாரியில் சிறுதானிய பயிர்களின் முக்கியத்துவம் குறித்து பேசினார். இணை இயக்குனர் சங்கரலிங்கம் விவசாயிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார். விவசாய அலுவலர்கள் மீனாட்சிசுந்தரம், துணைஅலுவலர் மார்க்கண்டன் ஏற்பாடுகளை செய்தனர்.

**மானியத்தில் இடுபொருட்கள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 13,2012,00:46 IST

வடமதுரை : வடமதுரையில், தை பட்டத்திற்காக, மானிய விலையில் இடுபொருட்கள் வழங்கப்படுகின்றன. வேளாண் உதவி இயக்குனர் பாஸ்கரன் கூறியதாவது: வடமதுரை வட்டாரத்தில் ஜிங்க் சல்பேட் உரம் மானியத்தில் வழங்கப்படுகிறது. 50 சதவீத மானியத்தில் தரச்சான்று பெற்ற புதியகம்பு, உளுந்து, கோ.சி.பி.எல்., தட்டை பயிறு விதைகளும் கிடைக்கும், என்றார்.

## நெற்பயிரில் கதிர்நாவாய் பூச்சி கட்டுப்படுத்தும் முறைகள்

பதிவு செய்த நாள் : ஜனவரி 13,2012,02:35 IST

தென்காசி : நெற்பயிரில் கதிர்நாவாய் பூச்சியை கட்டும்படுத்தும் முறைகள் பற்றி வேளாண்மை அதிகாரி விளக்கியுள்ளார்.
இதுகுறித்து தென்காசி வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

""தென்காசி வட்டாரத்தில் நடப்பு பிசான பருவத்தில் 3 ஆயிரத்து 500 எக்டர் பரப்பளவில் நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் காசிமேஜர்புரம், குன்னக்குடி, மேலகரம் கிராமங்களில் பூக்கும் பருவத்திலும், பால்பிடிக்கும் பருவத்திலும் நெற்பயிர் உள்ளது. இப்பருவத்தில் கதிர்நாவாய் பூச்சி தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.

அறிகுறிகள்

இப்பூச்சியின் குஞ்சுகளானது பச்சை அல்லது பழுப்பு நிறத்தில் இருக்கும். காலையிலும் மாலையிலும் இப்பூச்சிகள் அதிகளவில் நெல் மணிகளில் சாற்றை உறிஞ்சுகிறது. நெல் மணிகளில் இப்பூச்சியானது வாயுறுப்பை செலுத்தி உண்பதால் அப்பகுதி பழுப்பு நிற புள்ளிகளாக மாறிவிடும். இந்த துளையின் வழியோக பூஞ்சாணம் உட்புகுவதால் நெல் மணிகள் நிறம் பாதிப்படைந்து கருமை நிறமாக மாறும். இப்பூச்சியின் தாக்குதல் தீவிரமாகும் போது பாதிக்கப்பட்ட மணிகள் பதராக மாறும். மணி உருவான பின் இப்பூச்சி தாக்குவதால் மணிகள் சிறுத்தும் சுருங்கியுள் காணப்படும். பூச்சி இருப்பதை துர்நாற்ற வாடையிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

சாதக சூழ்நிலைகள்

பல கட்டங்களில் பயிர் நடவு செய்யப்படுவது, மேக மூட்டமாக இருப்பது, விட்டு விட்டு வரும் தூவான மழை இப்பூச்சி தோன்ற சாதகமான சூழ்நிலையாகும். நெல் வயலிற்கு அருகில் அதிக பரப்பளவில் இருக்கும் களைகள் மற்றும் கால்வாய் ஓரங்களில் இருக்கும் காட்டு செடிகள் இப்பூச்சிக்கு நெற் பயிர் இல்லா காலங்களில் புகலிடமாக அமைகிறது.

கட்டுப்படுத்தும் முறைகள்

ஒரு சேர அனைத்து விவசாயிகளும் நடுவது மற்றும் களைகளின்றி வயலை பராமரிப்பது போன்றவற்றால் கதிர்நாவாய் பூச்சியின் தாக்குதலிருந்து பயிரை பாதுகாக்கலாம். இறந்த நத்தைகள் மற்றும் எலிகளின் வாடை இப்பூச்சியை கவர்ந்திழுக்கும். குளவிகள் இதன் முட்டை

பருவத்தை தாக்கி அழிக்கும். வெட்டுக்கிளி, சிலந்தி, பொறிவண்டு, தட்டான் உள்ளிட்ட இரை விழுங்கிகள் இப்பூச்சியை உணவாக உட்கொள்கின்றன. 100 கதிர்களில் பூக்கும் பருவத்தில் 5க்கு மேலான கதிர்நாவாய் பூச்சிகளும், பால் பிடிக்கும் மற்றும் கதிர் முதிர்ச்சி பருவத்தில் 16க்கு மேலான கதிர் நாவாய் பூச்சிகளும் காணப்படும்.

இந்த வேளையில் பூச்சி கொல்லி மருந்துகள் தெளித்து கட்டுப்படுத்த வேண்டும். டைக்குளோர்வாஸ் 200 மில்லி, பொன்தியான் 200 மில்லி, அபாமெக்டின் 200 மில்லி உள்ளிட்டவற்றில் ஏதாவது ஒரு மருந்தை 200 லிட்டர் தண்ணீர் உபயோகித்து ஒரு ஏக்கர் பரப்பில் தெளிக்க வேண்டும். அல்லது 10 கிலோ வசம்பு தூளை காலை பனி பதத்தில் ஒரு ஏக்கர் பரப்பில் ஒரு வார இடைவெளியில் இருமுறை தூவி கட்டுப்படுத்தலாம்" என வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் அறிக்கையில் கூறியுள்ளார்.

**செங்கரும்பு விற்பனை "விறுவிறு'**

பதிவு செய்த நாள் : ஜனவரி 13,2012,00:56 IST

கருத்தை பதிவு செய்ய

பொள்ளாச்சி:பொள்ளாச்சி மார்க்கெட்டில், பொங்கல் பண்டிகையையொட்டி செங்கரும்பு விற்பனை சூடுபிடிக்க துவங்கியுள்ளது.பொங்கல் பண்டிகைக்கு இன்னும் இரண்டு நாட்கள் மட்டுமே உள்ளதால், பண்டிகைக்கு தேவையான செங்கரும்பு, மஞ்சள் கொத்து, காப்புகட்டு ஆகியவை பொள்ளாச்சி காந்தி மார்க்கெட், கடைவீதிகளில் விற்பனை செய்யப்படுகிறது.பொள்ளாச்சி சந்தைக்கு மதுரை, நத்தம், மேலூர், துவரங்குறிச்சி, தேனி ஆகிய பகுதிகளிலிருந்து விற்பனைக்காக கரும்பு வரத்துள்ளது. இந்தாண்டு, பருவம் தவறிய மழை, ஆட்கள் பற்றாக்குறை உள்ளிட்ட காரணங்களினால், விளைச்சல் குறைந்துள்ளது. இதனால், கடந்தாண்டை விட இந்தாண்டு பொள்ளாச்சி சந்தைக்கு கரும்பு வரத்து குறைந்துள்ளது.கடந்தாண்டு, பொங்கல் பண்டிகையின் போது பொள்ளாச்சிக்கு 60 லோடுகளில், தலா ஐந்தாயிரம் வீதம் கரும்பு வரத்திருந்தது. ஆனால், இந்தாண்டு அதிகபட்சமாக 45 ஆயிரம் கரும்பு மட்டுமே வரத்தாக உள்ளது. வரத்து குறைந்துள்ளதோடு, பண்டிகையும் நெருங்கி வருவதால், கரும்பின் விலை அதிகரித்து வருகிறது.மார்க்கெட்டில், நேற்று ஒரு கரும்பு 25 முதல் 30 ரூபாய்க்கும், ஒரு ஜோடி கரும்பு 50 முதல் 60 ரூபாய் வரை விற்பனையாகிறது. பொங்கல் பண்டிகை நெருங்குவதால், நாளை மதியத்திற்கு மேல் விலை மேலும் உயரும் வாய்ப்புள்ளது.

அதிகபட்சமாக ஒரு ஜோடி கரும்பு 80 ரூபாய் வரை விலை போகும் என

எதிர்பார்க்கப்படுகிறது.பொள்ளாச்சி காந்தி மார்க்கெட் கரும்பு வியாபாரி சகாப்தீன் கூறுகையில், ""இந்தாண்டு, எதிர்பார்த்த அளவு கரும்பு விளைச்சல் இல்லாததால், வரத்து குறைந்துள்ளது. பண்டிகை சமயத்திலும், போதிய வரத்து இருக்காது. வரத்து குறைந்துள்ளதோடு, தேவை அதிகரிப்பதால், விலை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.
பண்டிகைக்கு இன்னும் இரண்டு நாட்கள் மட்டுமே உள்ளதால், நாளை (இன்று) மதியம் முதல் விற்பனை சூடுப்பிடிக்கும். வரும் 16ம் தேதி வரை பொள்ளாச்சி சந்தையில் கரும்பு விற்பனை இருக்கும்," என்றார்.

**விவசாயிகள்கலந்துரையாடல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 13,2012,00:55 IST

கருத்தை பதிவு செய்ய
ஆனைமலை:ஆனைமலை அடுத்த மணக்கடவு வாணவராயர் வேளாண்மை கல்லூரியில் முத்துமல்லா அறக்கட்டளையின் சார்பாக "விவசாயத்தின் இன்றைய நிலையும் அதன் எதிர்காலமும்' என்ற தலைப்பில் கலந்துரையாடல் கூட்டம் நடந்தது.முன்னாள் வேளாண் அமைச்சர் கிருஷ்ணன் தலைமை வகித்தார். கற்பகம் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ராமசாமி விவசாயிகளின் கருத்துக்களை கேட்டறிந்தார். கருத்தரங்கில் தென்னிந்திய தென்னை சாகுபடியாளர்கள் சங்கத்தலைவர் கிருஷ்ணசாமி, என்.ஐ.ஏ., கல்வி நிறுவனங்களின் செயலர் இராமசாமி ஆகியோர் பேசினர்.கருத்தரங்கில் 100 முன்னோடி விவசாயிகளும், வேளாண் விஞ்ஞானிகளும் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வாணவராயர் வேளாண்மை கல்வி நிறுவன இயக்குனர் கெம்பு செட்டி மற்றும் கல்லூரி நிர்வாகத்தினர் செய்திருந்தனர்.

**2,000 மரக்கன்றுகள் நட இலக்கு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 13,2012,00:49 IST

அன்னூர்:ஆணையூர் மற்றும் சொக்கம்பாளையம், அரசு மேல்நிலைப்பள்ளியில், விலையில்லா சைக்கிள் வழங்கும் விழா நடந்தது.ஆணையூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடந்த விழாவில், தலைமை ஆசிரியர் குபேந்திரன் வரவேற்றார். ஒன்றிய சேர்மன் கண்ணம்மாள், ஊராட்சி தலைவர் தங்கவேல் முன்னிலை வகித்தனர்.

பிளஸ் 1 மாணவியர் 36 பேர், மாணவர்கள் 33 பேர் என 69 பேருக்கு, எம்.எல்.ஏ., கருப்பசாமி

சைக்கிள் வழங்கினார். ஈஷா யோக மையத்தின் பசுமைக்கரங்கள் சார்பில், 2,000 மரக்கன்றுகளுக்கான விதைகள், பாலிதின் கவர்கள் பள்ளிக்கு வழங்கப்பட்டன. தேசிய பசுமைப்படை, சுற்றுச்சூழல் மன்ற மாணவர்கள் மரக்கன்றுகளை, பள்ளி வளாகம், ஆணையூர், மூக்கனூர் கிராமங்களில் நட்டு பராமரிக்க திட்டமிட்டுள்ளதாக தெரிவித்தனர். பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் நடராஜன் உள்பட பலர் பங்கேற்றனர்.சொக்கம்பாளையம் காந்திஜி அரசு மேல்நிலைப்பள்ளியில் நடந்த விழாவில், 10ம் வகுப்பு மாணவர்கள் 162 பேருக்கும், பிளஸ் 1 மாணவர்கள் 121 பேருக்கும், தலா 1,500 ரூபாயும், பிளஸ் 2 மாணவர்கள் 114 பேருக்கு தலா 2,000 ரூபாயும், என ஆறு லட்சத்து 52 ஆயிரத்து 500 ரூபாய், சிறப்பு கல்வி ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.பேரூராட்சித் தலைவர் ராணி, உள்பட பலர் பங்கேற்றனர்.

**சான்று பெற்ற விதைகளை பயன்படுத்த அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 13,2012,00:49 IST

கருத்தை பதிவு செய்ய

பேரூர்:"விதைப்பயிர் உற்பத்திக்கு, சான்றுபெற்ற விதைகளை, பயன்படுத்த வேண்டும்'என, விதை உற்பத்தி விவசாயிகள் பயிற்சிக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

தமிழக அரசின் வேளாண்துறையின், விதை கிராமத்திட்டத்தின் கீழ் பயறுவகைகள் தொடர்பான, விதை உற்பத்தி விவசாயிகள் பயிற்சி, தீத்திபாளையத்தில் நடந்தது. தோட்டக்கலைத்துறை உதவிஇயக்குநர் ராஜாமணி வரவேற்றார். இதில், தொண்டாமுத்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் ஜெயஸ்ரீ தலைமை வகித்து பேசியதாவது:

தரமான பயிர் விதை உற்பத்தி, பயிர் ரகங்களின் பண்புகள், விதை அறுவடை, சுத்திகரிப்பு, சேமிப்பு உள்ளிட்ட வழிமுறைகளை தெரிந்து கொள்வதே விதை கிராமத்திட்டத்தின் நோக்கமாகும்.

தரமான விதை உற்பத்திக்கு இனத்தூய்மை, உரியபருவம், நிலம் தயார்படுத்துதல், தேவையான உரம், விதைத்தேர்வு, விதை அளவு ஆகியன மிக முக்கியமாகும். விதைப்பயிர் உற்பத்திக்கு சான்றுபெற்ற விதைகளை மட்டுமே, பயன்படுத்த வேண்டும்.விதை உற்பத்தி செய்வதில் எவ்வளவு கவனம் தேவையோ, அதே அளவு விதைகளை அடுத்த விதைப்பு பருவம்வரை, சேமித்து வைப்பதிலும் தேவைப்படுகிறது. விதையின் ஈரப்பதம் பொறுத்து, விதையின் தரம் மாறுபடுகிறது. கடினமான விதைகள், விதைப்பதற்கு ஏற்றதல்ல. விதை உறைகள் கடினமாக இருப்பதுதான், கடினத்தன்மைக்கு காரணமாகும். எனவே, விதையின் கடினத்தன்மையை நீக்க, அமிலச்சிகிச்சை செய்ய வேண்டும். ஒரு கிலோ விதைக்கு 100 மி.லி., என்ற அளவில் கந்தக அமிலம் கலந்து,

இரண்டு நிமிடம் வைத்திருந்து நீரில், மூன்று முறை கழுவ வேண்டும். இதனால், விதைகளில் மேல் படர்ந்துள்ள அமிலம் நீக்கப்பட்டு, நான்குமணி நேரம் நிழலில் உலர்த்தி விதைக்கலாம். நல்ல வடிகாலுள்ள செம்மண் மற்றும் வண்டல்மண் அதிகமான விதைகளை தரும்.விதைகளை சேமிப்பதற்கு முன் பூஞ்சணக்கொல்லி கொண்டு விதைநேர்த்தி செய்யவேண்டும்.இவ்வாறு, அவர் பேசினார். தீத்திபாளையம் ஊராட்சித் தலைவர் விஜியலட்சுமி, விவசாயி பெரியசாமி, மன்ற உறுப்பினர் பிரம்மகிரி, வேளாண் நிர்வாகிகள் கவிதா, பெருமாள், சிவகுமார் உள்பட பலர் பயிற்சியில் பங்கேற்றனர்.

**கொள்முதல் மையங்களில் பட்டுக்கூடு விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 13,2012,00:14 IST

கருத்தை பதிவு செய்ய

உடுமலை:சீரான தட்பவெப்ப நிலை துவங்கி தரமான கூடுகள் உற்பத்தியாகி வருவதால் கொள்முதல் மையங்களில் பட்டுக்கூடுகளுக்கு விலை படிப்படியாக உயர்ந்து வருகிறது.உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் 2 ஆயிரம் ஏக்கர் வரை மல்பெரி பயிரிடப்பட்டு நாள்தோறும் 1 டன் வரை வெண்பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கடந்த ஓராண்டாக சீனாவிலிருந்து கச்சாபட்டு இறக்குமதி உட்பட பல்வேறு காரணங்களால் வெண்பட்டுக்கூடுகளுக்கு போதிய விலை கிடைக்கவில்லை. இறக்குமதிக்கு முன் கிலோ 400 ரூபாயாக இருந்த விலை இறக்குமதியால் 200 ரூபாயாக சரிந்தது. இதனால், உற்பத்தியாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். கடந்தாண்டு பருவமழை குறைவு, தட்பவெப்ப நிலையில் அடிக்கடி மாற்றம், விலை குறைவு ஆகிய காரணங்களால் உற்பத்தி பாதிக்கப்பட்டது.தட்பவெப்ப நிலை மாற்றம் காரணமாக தரமான பட்டுக்கூடுகளை உற்பத்தி செய்யமுடியவில்லை. இதனால், கர்நாடகா மையத்திலும் தமிழக கூடுகளுக்கு குறைந்த விலையே கிடைத்தது. சராசரியாக கிலோவுக்கு 250 ரூபாய் விலை நிலவரம் இருந்தது.

இந்நிலையில், உடுமலை பகுதியில் தட்பவெப்ப நிலையில் மாற்றம் ஏற்பட்டு வெண்பட்டுக்கூடுகள் வளர்ப்பிற்கு தகுந்த மிதமான சீதோஷ்ண நிலை டிச.,மாத இறுதியிலிருந்து நிலவுகிறது.இதனால், அதிக நூற்பு திறனுடைய தரமான பட்டுக்கூடுகள் உற்பத்தியாகிறது. தரமான பட்டுக்கூடுகளுக்கு கர்நாடகா மையத்திலும், பிற மையங்களிலும் கடந்த சில நாட்களாக கிலோவுக்கு 275 ரூபாய் வரை விலை கிடைத்து வருகிறது.நீண்ட இடைவெளிக்கு பிறகு வெண்பட்டுக்கூடுகளின் விலை படிப்படியாக உயர்ந்து வருவது உற்பத்தியாளர்களின் எதிர்பார்ப்பை அதிகப்படுத்தியுள்ளது.

**விவசாயிகளுக்கு தொழில் நுட்ப பயிற்சி: கலெக்டர் வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 12,2012,23:44 IST

கருத்தை பதிவு செய்ய

தர்மபுரி: ""தர்மபுரி மாவட்டத்தில் உணவு உற்பத்திக்கு ஈடுகொடுக்கும் வகையில் புதிய தொழில் நுட்ப பயிற்சி விவசாயிகளுக்கு அளிக்க வேண்டும்,'' என அதிகாரிகளை கலெக்டர் லில்லி கேட்டு கொண்டார்.

தர்மபுரி கலெக்டர் லில்லி தலைமையில் மக்கள் குறைதீர் கூட்டம் நடந்தது. டி.ஆர்.ஓ., கணேஷ் முன்னிலை வகித்தார். துணை ஆட்சியர் செல்வராஜன், தனி துணை ஆட்சியர் பாலசுப்பிரமணியம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பல்வேறு கோரிக்கை வலியுறுத்தி பொது மக்களிடம் இருந்து 284 மனுக்கள் பெறப்பட்டன.

மனுக்களை பரிசீலனை செய்து கலெக்டர் லில்லி சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அனுப்பி மனுக்கள் மீத ஒரு வாரத்தில் உரிய தீர்வு காண வலியுறுத்தினார்.

பின்னர் கலெக்டர் லில்லி பேசியதாவது: உணவு உற்பத்திக்கு ஈடுகொடுக்கும் வகையில் வேளாண் துறையின் புதிய தொழில் நுட்பங்களை கொண்டு விவசாயம் செய்ய விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க வேண்டும். இரண்டாம் பசுமை புரட்சிக்கு வித்திடும் வகையில் திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பங்களும், பயிர் வகைகளை உற்பத்தி செய்திட உரிய சிறப்பு திட்டங்களையும், செய்து வரைவாக பணிகள் மேற்கொள்ள வேண்டும்.

விதை பெருக்க திட்டத்தின் கீழ் 23,650 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர். விவசாயிகள் பயன் அடையும் வகையில் இத்திட்டத்தை விரிவுப்படுத்த வேண்டும். மலைவாழ் மக்கள் சாகுபடி செய்ய தோட்டக்கலை பயிர்களை வழங்கிட வேண்டும். மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு சுழல் நிதி, பொருளாதார கடன், தனி நபர் கடன் ஆகியவற்றை விரைந்து வழங்க வேண்டும். கடன் இலக்கை பிப்ரவரி 2012க்குள் 100 சதவீதம் எட்ட வேண்டும்.

சமூக பாதுகாப்பு துறையினர் ஒருங்கிணைந்து செயல்பட்டு குழந்தை திருமணங்கள் நடக்காமல் தடுக்க வேண்டும். கல்வி கடன் கேட்டு வரும் விண்ணப்பங்களை வங்கியாளர்கள் பரிசீலனை செய்து விரைந்து கல்வி கடன் வழங்கிட வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

மாவட்ட வழங்கல் அலுவலர் சுப்பிரமணி, ஆதி திராவிடர் நல அலுவலர் ஜெகதீஸ்வரி, பிற்பட்டோர் நல அலுவலர் பழனியம்மாள், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் ஜோகி, மாற்று திறனாளிகள் நல அலுவலர் மணிமாறன், துணை இயக்குனர் (சுகாதாரம்) விஜயலட்சுமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

தினகரன்

**புளியம்பட்டி சந்தையில் மாடுகள் வரத்து குறைவு**

பதிவு செய்த நாள் : 1/13/2012 12:53:37 AM



பவானிசாகர் : ஈரோடு மாவட்டம், புஞ்சைபுளியம்பட்டியில் வாரந்தோறும் வியாழக்கிழமை மாட்டுச்சந்தையும், காய்கறி சந்தையும் நடக்கிறது. சத்தியமங்கலம் உள்பட சுற்றுப்புற பகுதிகள் மற்றும் மைசூரில் இருந்து மாடுகளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். கோவை, ஈரோடு மாவட்ட விவசாயிகள், கறவை மாடு வாங்கவும், கேரளாவில் இருந்து வியாபாரிகள் அடிமாடுகளை வாங்கவும் வருகின்றனர்.

வழக்கமாக, சந்தைக்கு 2,000 மாடுகள் வரும். ஆனால், நேற்று நடந்த சந்தைக்கு 200க்கும் குறைவான மாடுகளே வந்திருந்தன. இதனால், வாங்க வந்த வியாபாரிகள் ஏமாற்றமடைந்தனர். இதுபற்றி விவசாயிகள் கூறுகையில், 'மாட்டுப்பொங்கல் தினத்தன்று மாடுகளுக்கு பூஜை செய்வார்கள். எனவே, பொங் கலுக்கு முன் மாடுகளை விற்க மாட்டார்கள். இதனால், மாடுகள் வரத்து குறைந்துவிட்டது' என்றனர். எனினும், பொங்கலுக்கு மாடுகளை அலங்கரிக்க தேவையான கயிறு, சங்கு, சலங்கை போன்றவற்றின் வியாபாரம் சூடுபிடித்தது. பொங்கலை முன்னிட்டு காய்கறி, தேங்காய் அதிகமாக வந்திருந்தன. தேங்காய் விற்பனை ஜோராக இருந்தது.

**வெற்றிலை விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : 1/13/2012 12:52:51 AM



உடுமலை : திருப்பூர் மாவட்டத்தில் பல பகுதிகளில் வெற்றிலை சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த மாதம் 2வது வாரம் வரை இப்பகுதியில் பெய்த மழையால் வெற்றிலை கொடிகள் அழுகின. இதனால் பாதிக்கப்பட்டது. உடுமலைக்கு தினசரி 800 கிலோ வெற்றிலை வரத்து இருந்தது, அது தற்போது 300 கிலோவாக குறைந்து உள்ளது. மடத்துக்குளம், கணியூர் பகுதியில் 500 கிலோவில் இருந்து 150 கிலோவாக குறைந்துள்ளது. 3 கவுளி கொண்ட வெற்றிலை கட்டு ஒரு கிலோவாகும். இது ரூ.15க்கு விற்கப்பட்டது, ஆனால், தற்போது வரத்து குறைவால் ஒரு கவுளி ரூ.45ஆக உயர்ந்துள்ளது. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு விலை மேலும் அதிகரிக்கும்.

**உணவு பணவீக்கம் மைனஸ் 2.9 சதவீதம்**

பதிவு செய்த நாள் : 1/13/2012 12:51:56 AM



புதுடெல்லி: உணவுப் பணவீக்கம் தொடர்ந்து 2 வாரங்களாக மைனசில் இருந்து வருகிறது. கடந்த டிசம்பர் 31ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் உணவு பணவீக்கம் (&)2.9 சதவீதமாக இருந்தது.

அதற்கு முந்தைய வாரத்தில் இது (&)3.36 சதவீதமாக இருந்தது. 2010ம் ஆண்டின் இதே காலத்தில் இது 19 சதவீதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

இதுதொடர்பாக மத்திய அரசு வெளியிட்டுள்ள புள்ளிவிவரப்படி, கடந்த ஆண்டின் இதே காலத்தோடு ஒப்பிடும்போது வெங்காயம் 74.77 சதவீதமும், உருளைக்கிழங்கு 31.97 சதவீதமும் ஒட்டுமொத்த காய்கறிகள் 49 சதவீதமும் குறைந்துள்ளது. பணவீக்கம் தொடர்ந்து குறைந்து வந்ததால், ரிசர்வ் வங்கி கடன் வட்டியை குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

## ***டிசம்பர் 31–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் உணவு பணவீக்கம் –2.90 சதவீதம்***



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு,புதுடெல்லி*

*2011 டிசம்பர் 31–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், உணவு பணவீக்கம் –2.90 சதவீதமாக உள்ளது. மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் இப்பணவீக்கம் முந்தைய வாரத்தில் –3.36 சதவீதமாக இருந்தது. ஆக, தொடர்ந்து இரண்டாவது வாரமாக உணவு பணவீக்கம் மைனசாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.*

*வெங்காயம்*

*கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில் ஓர் ஆண்டு கால அடிப்படையில் வெங்காயம், உருளைக்கிழங்கு முறையே 74.77 சதவீதம் மற்றும் 31.97 சதவீதம் குறைந்துள்ளது. காய்கறி விலை 49.03 சதவீதம் குறைந்துள்ள நிலையில், கோதுமை விலை 3.35 சதவீதம் சரிவடைந்துள்ளது.*

*உணவு பணவீக்கம் குறைந்து வருவதையடுத்து, பாரத ரிசர்வ் வங்கி இம்மாதம் 24–ந் தேதி வெளியிடும் பணக் கொள்கை ஆய்வு அறிக்கையில் முக்கிய கடன்களுக்கான வட்டியை*

*குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.*
*உணவு தானியங்கள் உற்பத்தி நன்றாக உள்ளதால், பணவீக்கம் சரிவடைந்து வருகிறது. அதேசமயம், கடந்த 2010–ஆம் ஆண்டின் இதே வாரத்தில் உணவு பணவீக்கம் 19 சதவீதமாக மிகவும் உயர்ந்து இருந்தது. எனவே, இதனுடன் ஒப்பிடும்போது உணவு பணவீக்கம் மிகவும் சரிவடைந்துள்ளதாக தோன்றுகிறது என பொருளியல் நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.*
*பருப்பு வகைகள் மற்றும் பால் விலை முறையே 14.72 சதவீதம் மற்றும் 10.79 சதவீதம் உயர்ந்துள்ளது. முட்டை, மீன், இறைச்சி உள்ளிட்ட அசைவ உணவு பொருள்கள் விலை 15.22 சதவீதம் உயர்ந்துள்ளது. பழங்கள் மற்றும் தானியங்கள் விலை முறையே 9 சதவீதம் மற்றும் 2.03 சதவீதம் உயர்ந்துள்ளது.*
*எண்ணெய் வித்துக்கள் உள்ளிட்ட உணவு சாரா பொருள்கள் பணவீக்கம் 0.85 சதவீதத்திலிருந்து 1.29 சதவீதமாக உயர்ந்துள்ளது. எரிபொருள் மற்றும் எரிசக்தி பணவீக்கம் 14.60 சதவீதத்திலிருந்து 14.45 சதவீதமாக குறைந்துள்ளது.*
*பொது பணவீக்கம்*
*பொது பணவீக்கத்தை கணக்கிடுவதில் 20 சதவீத பங்களிப்பைக் கொண்டுள்ள முதன்மை பொருள்கள் பணவீக்கம் 0.10 சதவீதத்திலிருந்து 0.51 சதவீதமாக உயர்ந்துள்ளது.*

## வெங்காயம் ஏற்றுமதி விலை குறைக்கப்பட்டது

*ஜெயஸ்ரீ போஸ்லே,பூனா*
*வெங்காயம் ஏற்றுமதிக்கான குறைந்தபட்ச விலையை டன்னுக்கு 100 டாலர் (சுமார் ரூ.5,300) குறைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதனால் வெங்காயம் ஏற்றுமதி அதிகரிக்கும். பெரிய வெங்காயத்திற்கான ஏற்றுமதி விலை டன்னுக்கு 250 டாலரிலிருந்து 150 டாலராக குறைக்கப்பட்டுள்ளது. சின்ன வெங்காயத்திற்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலை டன்னுக்கு 300 டாலரிலிருந்து 250 டாலராக குறைக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதி விலையை குறைக்க வேண்டும் என்ற விவசாயிகளின் சமீபத்திய கோரிக்கை ஏற்கப்பட்டுள்ளது.*
*தற்போது நாட்டின் பல பகுதிகளில் மொத்த விற்பனை சந்தையில் ஒரு கிலோ பெரிய வெங்காயம் ரூ.3 என்ற அளவிற்கு சரிவடைந்துள்ளது. ஏற்றுமதி விலை குறைக்கப்பட்டுள்ள நிலையில் இனி வெங்காயம் விலை ஓரளவிற்கு உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற ஆண்டு டிசம்பர் மாதத்தில் 95,000 டன் வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டது.*

## கேரள பகுதிக்குள் இருப்பதால் முல்லைப் பெரியாறு அணையை உடைக்க கேரளாவுக்கு உரிமை உண்டு ஐவர் குழுவிடம் கேரளா புதிய மனு

*திருவனந்தபுரம், ஜன.13–*
*"கேரள பகுதிக்குள் இருப்பதால், முல்லைப் பெரியாறு அணையை உடைக்க கேரளாவுக்கு அதிகாரம் உண்டு'' என்று, ஐவர் குழுவிடம் கேரளா புதிய மனுவை தாக்கல் செய்து இருக்கிறது.*
*முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை*
*கேரள மாநில எல்லையில் இருக்கும் முல்லைப் பெரியாறு அணை மூலம் தமிழ்நாட்டில் உள்ள தேனி, திண்டுக்கல் உள்பட 5 மாவட்டங்களில் விவசாயம் நடைபெற்று வருகிறது. இந்த அணை*

கட்டி 100 ஆண்டுகள் ஆகிவிட்டது என்ற காரணத்தை காட்டி, தற்போது இருக்கும் அணைக்கு பதிலாக புதிய அணை கட்ட வேண்டும் என்று, சுப்ரீம் கோர்ட்டால் நியமிக்கப்பட்ட ஐவர் குழுவிடம் கேரளா வற்புறுத்தி வருகிறது.

இதற்கு தமிழக அரசு எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. "தற்போது இருக்கும் அணை மிகவும் பலமாக இருக்கிறது. இதனால் அணை உடைய வாய்ப்பு இல்லை. எனவே புதிய அணை தேவை இல்லை'' என்று தமிழக அரசு வாதாடி வருகிறது.

உரிமை உண்டு

இந்த நிலையில் நேற்று டெல்லியில் ஐவர் குழுவின் கூட்டம் நீதிபதி ஆனந்த் தலைமையில் நடந்தது. அப்போது கேரளா சார்பில் புதிய மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில் கூறப்பட்டு இருப்பதாவது:–

கேரள பகுதிக்குள்தான் முல்லைப் பெரியாறு அணை இருக்கிறது. எனவே அதை உடைத்து விட்டு புதிய அணை கட்ட கேரளாவுக்கு உரிமை உண்டு.

குழு அமைக்கலாம்

புதிய அணை கட்டிய பின், அதை பாதுகாக்கும் உரிமை கேரளாவுக்கு அளிக்க வேண்டும். அதன் நீர்பங்கீடு பற்றி ஆராய்ந்து முடிவு எடுக்க, சுப்ரீம் கோர்ட்டு ஒரு குழுவை நியமிக்கலாம். இந்த குழு இதற்கான விதிமுறைகளை வகுக்கலாம். புதிய அணையின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை தமிழ்நாட்டுக்கு பங்கீடு செய்யவும் கேரளா தயாராக இருக்கிறது. இவ்வாறு மனுவில் கூறப்பட்டு இருக்கிறது.